இருமொழிக் கொள்கை என நாடகமாடும் த.வெ.க அரசின் மருந்துக்குறிப்பு:





தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

உணவுக்கு முன் உணவுக்குப் பின் காலை, மதியம், மாலை, இரவு என தினமும் நான்கு வேளையும் இந்தி எடுத்துக்கொள்ள வேண்டும்!

வடகிழக்குப் பருவமழை: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம்!

மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!



சென்னை,அக்.7-

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (06.10.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்ட ரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், துணை ஆணையாளர்கள் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், (சுகாதாரம்), திருமதி சித்ரா விஜயன், (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி ஸ்வேதா சுமன், (வடக்கு), எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), அஃதாப் ரசூல், (தெற்கு) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :

மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறையின் சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் ஆறுகள், கால்வாய்கள், இரயில்வே குறுக்குக் கால்வாய்கள், மழைநீர் வடிகால்களில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகள், வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர் வாரும் பணிகள், புதிதாக கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் இணைப்புப் பணிகள், கால்வாய் மேம்பாட்டுப் பணிகள், சுரங்கப்பாதைகளில் உள்ள கிணறுகளில் மேற் கொள்ளப்படும் தூர்வாரும் பணிகள் ஆகியவற்றை பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட வேண்டும்.

மழைநீர் தேங்க வாய்ப்புள்ள தாழ்வான பகுதிகளில் மோட்டார் பம்புகளை தயார்நிலையில் வைக்க வேண்டும். மேலும், மோட்டார் பம்புகள், மர அறுவை இயந்திரங்கள் உள்ளிட்ட அனைத்து வகை இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் செயல்படும் வகையில் உள்ளதா என பரிசோதித்து தயார்நிலையில் வைத்திட வேண்டும்.

பொதுமக்களை தங்க வைப்பதற்கான 215 நிவாரண முகாம்களில் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளதா எனவும், 116 உணவு தயாரிக்கும் மைய சமையல் கூடங்களில் உணவுப் பொருட்களின் இருப்பு உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து போதுமான அளவு இருப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

புழல் மற்றும் கொசஸ்தலையாறு உபரிநீர் வெளியேறும் இடத்தில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகளில் உள்ள பள்ளங்கள் மற்றும் குழிகள் ஆகியவற்றை பருவமழைக்கு முன்னதாக சரிசெய்ய வேண்டும்.

கொரட்டூர் ஏரி, மயிலை பாலாஜி நகர் கால்வாய், பராங்குசபுரம், இரங்கராஜபுரம், சிட்டி லிங்க் சாலை, மவுண்ட் ரோடு, ஜி.பி. சாலை, என்.எஸ்.சி. போஸ் சாலை, அரும்பாக்கம் மெட்ரோ உள்ளிட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ள வேண்டும். மழைக்கால முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக அதிகளவிலான மருத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்த வேண்டும்.

மழைக்காலங்களில் மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண் மையம், ட்விட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களைப் பெற்று உடனடி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக பணியாளர்களை சுழற்சி முறையில் பணியமர்த்த வேண்டும். மழையினால் மக்கள் பாதிக்காதவாறு அனைத்து முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கிராமிற்கு ரூ.10 ஆயிரம் வரை நகைக் கடன்

கூட்டுறவு வங்கிகளில் கிராமிற்கு ரூ.10,000 வரை நகைக்கடன் வழங்க உத்தரவு!

சென்னை, அக். 7-

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் தங்க நகையை அடமானம் வைத்தால், கிராமுக்கு தற்போது அதிகபட்சமாக, 7,000 ரூபாய் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள போர் உள்பட பல்வேறு காரணங்களால் தங்கம் விலை உயர்ந்து வருகிறது.

இதனால், தேசிய மற்றும் தனியார் துறைகளை சேர்ந்த வங்கிகள், நிதி நிறுவனங்களில், கிராம் தங்கத்துக்கு அதிகபட்சம், 10,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

இதேபோல், அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்க கூட்டுறவு நிறுவனங்களிலும், கிராம் தங்கத்திற்கு அதிகபட்சம், 9,000 முதல், 10,000 ரூபாய் வரை கடனை உயர்த்த, கூட்டுறவு துறை முடிவு செய்துள்ளதாக முன்பு தகவல் வெளியானது.

இந்நிலையில், கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப்படும் நகைக்கடன்களுக்கு கிராமிற்கு ரூ.10 ஆயிரம் வரை கடன் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களில் இதுவரை கிராமிற்கு ரூ.7000 வரை வழங்கப்பட்ட நிலையில் தற்போது ரூ.10,000 வரை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பிற வங்கிகளில் வழங்குவது போலவும் தங்க நகைகளின் சந்தை மதிப்புகளுக்கு ஏற்ப கிராமிற்கு வழங்கப்படும்.

ரூ.10 ஆயிரம் அல்லது நகை சந்தை மதிப்பில் 75 சதவீதம் என மாற்றியமைத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; 'அண்ணன் சீர்' திட்டத்திலே பலனடையனும்னா, வருஷத்துக்கு இரண்டரை லட்ச ரூபாய் வரை வருமானம் இருக்கணுமாமே! தேர்தல் வாக்குறுதியிலே 'ஐந்து லட்ச ரூபாய் வரை வருமானம் வரும் மகளிர்க்கு' அப்படின்னுதானே த.வெ.க. சொல்லிச்சு.

பட்டணம் : **ஆமாமய்யா; நீ சொல்றது கரெக்ட்தான். எந்த வாக்குறுதியைதான் அவங்க ஒழுங்கா நிறைவேற்றாங்க. மகளிர் உதவித் தொகை ரூபாய் 2500 தருவோம் - அப்படின்னாங்க. தர்றாங்களா, இல்லியே! எல்லாம் அரை குறைதான். பாவம் மக்கள்!**

